# கற்பகம்
## KATPAKAM

திங்கள் இதழ்

விலை ரூபா 10/-


### குறளமுதம்–53

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்–6–அறத்துப்பால்–வாழ்க்கைத்துணை**

இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை.

ஒருவனுடைய மனைவி நற்குண நற்செயல்களால் சிறப்புடையவளானால், அவனுக்கு இல்லாதது எது? அவள் அச்சிறப்பு இல்லாதவளானால் அவனுக்கு உள்ளது எது?


மலர்–05 மார்ச்–2012 இதழ்–53


# கூட்டுறவு ஊழியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம்!

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பாராட்டு!

அரசாங்கத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தமது இளைப்பாறும் காலத்திற்கு பின் ஓய்வூதியம் பெறுவதுபோல கூட்டுறவு பணியாளர்கள், முக்கியமாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்கள் இளைப்பாறியபின் தங்களுக்கான ஓய்வூதியப் பணத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன் புரிக் கூட்டுறவுச் சங்கம் வழங்கி



வருவது பாராட்டுக்குரிய செயலாகும் என கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே. அருந்தவநாதன் பாராட்டியுள்ளார்.

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு கி.குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட (3ம் பக்கம் பார்க்க)

## கணினி கொள்வனவுக்கு நிதியுதவி!



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ஒருவர் தான் பணியாற்றிய சங்கத்திற்கு கணினி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 50,000 ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற திரு மு.மகாலிங்கம் என்பவரே இவ் அன்பளிப்பை செய்தவராவார்.

இவரது இத்தகைய சேவை ஏனைய பணியாளர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்குமென கூட்டுறவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நெறியாளர்களுக்கான பயிற்சி!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நெறி



யாளர் குழு உறுப்பினர்களுக்கு முழு நேரப் பயிற்சி வகுப்பொன்றை கடந்த 6ம் திகதி செவ்வாய்க்கிழமை சமாச மண்டபத்தில் நடத்தியது. (6ம் பக்கம் பார்க்க)

### சிந்தனைத்துளி

"இறைவனை வங்குவது நீ செய்த காரியம் தடைப்படாமல் இருப்பதற்காகவேயன்றி, நீ முயற்சி செய்யாத காரியம் நடைபெறுவதற்காகவல்ல " -அறிஞர்-

## கற்பகக்கரு

### சமாசத்தை வலுப்படுத்துவோம்!

யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், கொத்தனிகளினதும் உச்சமட்ட அமைப்பாக செயற்பட்டுவரும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தை சங்கங்கள் வலுப்படுத்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்கள் ஒன்றிணைந்து 2ம் படிச் சங்கமாக உருவாக்கியுள்ள சமாசத்தை சங்கங்கள் வலுப்படுத்துவதனால் தாம் அடையக்கூடிய நன்மைகள் எவை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

சமாசம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்வர்களுக்கும் பணியாளர்களுக்குமான பல்வேறு தரப்பட்ட சமூக நலத்திட்டங்களை தயாரித்து, அதனை சிறந்த முறையில் செயற்படுத்தி வருவதை எவரும் மறுத்துக்கூற முடியாது.

கூட்டுறவு திணைக்களத்தின் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சமூக நலத்திட்டத்தினால் அங்கத்தவர்களதும் பணியாளர்களதும் வாழ்வாதார நிலை உயர்வடையக்கூடியதாக உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முக்கியமாக சமாசத்தின் செயற்பாடுகளை தெளிவாக எடுத்துக்கூறுவதாக இருந்தால், அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த ஓய்வூதியத் திட்டம், விபத்து நிதித் திட்டம், அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கான கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியுதவிகள், சங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பனை வெல்ல உற்பத்திக்குரிய மானிய உதவி, சித்த வைத்திய கூ.சங்கத்தினால் நடத்தப்படும் இலவச நடமாடும் மருத்துவ சேவைக்கான நிதியுதவி, பணியாளர் நலன்புரிச் சங்க செயற்பாட்டுக்கான உதவிகள் என்பவற்றையும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்கின்ற உதவிகளையும் குறிப்பிட்டுக்கூறலாம்.

சமாசத்தின் இத்தகைய செயற்பாடுகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகள். சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் என்பன பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண்டும். இவ் ஒத்துழைப்புக்களை வழங்குகின்ற அதேநேரம், சமாசத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு சங்கங்கள் முன்வர வேண்டும்.

இத்தகைய பரஸ்பர ஒத்துழைப்பின்மூலம் சமாசத்தினுடைய நிர்வாகக் கட்டுக்கோப்பை பலமுடையதாக மாற்றியமைக்கக் கூடிய பொறுப்பு ஒவ்வொரு சங்கங்களுக்கும் உண்டு என்பதை கற்பகம் வலியுறுத்திக்கூற விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

### வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறைவிதி 7

(முன்னையதிலிருந்து திருத்தம் செய்யப்பட்டு கூ.அ.உ. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது)

13.02 சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் தென்னிலங்கையில் நடைபெறும் கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளை அறிவதற்கும், தொழிற்சாலைகளின் வடிவமைப்புக்கள், உற்பத்திகள், அதில் பணிபுரியும் பணியாளர்களின் வினைத்திறன்களை நேரில் பார்வையிடவும், அதன் மூலம் எமது நிறுவனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பாக இக் கூட்டுறவுக் கல்விச் சுற்றுலா அமையும்.

13.03 சங்கங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் சுழற்சி முறையில் தென்னிலங்கையில் சிறப்பாக செயற்படும் கூட்டுறவுச் சங்கங்களை பார்வையிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

13.04 மேற்படி கல்விச் சுற்றுலாவுக்கான ஏற்பாட்டினை சமாசம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடன் தொடர்புகொண்டோ, அல்லது தனியார் சுற்றுலா சம்பந்தமான நிறுவனங்களுடன் தொடர்புகொண்டோ மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்துச் செலவு, தங்குமிட வசதிகள் தவிர ஏனைய செலவுகளை சுற்றுலா செல்பவர்களே மேற்கொள்ள வேண்டும்.

13.05 சுற்றுலா செல்பவர்களுக்கான ஒழுங்குகளில் அவர்களது விடுமுறையினையும் விடுமுறை தினமாக, அதாவது சம்பளத்துடனான விடுறையாக வழங்க உரியவர்கள் ஒத்துழைக்க வேண்டும். சுற்றுலா தினங்கள் ஐந்து தினங்களுக்கு மேற்படலாகாது.

**14.** பனை வளம் தொடர்பான நவீன தொழில்நுட்பத்தினை யாழ். பல்கலைக்கழகத்துடனும், பனை அபிவிருத்திச் சபையுடனும், மேலும் இத்துறையில் யார் யார் அக்கறையுள்ளவர்களோ அவர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தி இவ் வளத்தினை முழுமையாகப் பயன்படுத்த தொழில்நுட்ப ஆலோசனைகளைப்பெற நடவடிக்கை எடுப்பதுடன், இதற்கான செலவினை உரிய முறைப்படி இந் நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**15.** பனை வளம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்குரிய நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று இத்துறை சார்ந்தவர்களின் சமூக, பொருளாதாரம் வளம்பெறச் செய்வதோடு, இவ்வளம் அனைத்து மக்களாலும் பயன்படுத்தக்கூடிய ஒ உப உணவு உற்பத்தி நிறுவன மாக எதிர்காலத்தில் இந்நிறுவனங்கள் நன்மதிப்பு பெறச்செய்யும் பாரிய பொறுப்பை சமாசம் கொண்டுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு உரிய அனுமதிகளை பெற்று பனம்தொழில் உற்பத்திகளில் இந்நிதிய முதலீடுகளை பயன்படுத்தி அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தப் பாடுபடவேண்டும்.

**16.** அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நிதியத்தின் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறைகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

16.1 ஒவ்வொரு கொத்தணிக்கு உட்பட்ட சங்கங்கள் கொத்தணி மட்டத்தில் கூடி, ஒரு அங்கத்தவரையும், ஒரு பணியாளரையும் இக்குழுவின் பிரதிநிதிகளாக பெயர் விபரங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வாறு வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு கொத்தணிகளிலும் தலா இருவரை தெரிவுசெய்து அனுப்புதல் வேண்டும்.

16.2 தெரிவு செய்யப்பட்ட 8 பிரதிநிதிகளுடன் வடமாகாண ப.தெ.வ. அ.கூ.ச.சமாசத்தின் தலைவர், பொதுமுகாமையாளர் உட்பட 10 உறுப்பினர்களுடன் சமாசத்தின் கூ.அ.உத்தியோகத்தரும் இணைக்கப்பட்டு மொத்தம் 11 உறுப்பினர்களுடன் இக்குழு செயற்படும். கூ.அ.உத்தியோகத்தர் நெறிப்படுத்தல்,

[4ம் பக்கம் பார்க்க]

# நிகழ்வுகளின் நிழல்கள்!



கடந்த மாதம் நடைபெற்ற யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வில், மேற்படி சங்கத்தின் ஓய்வூதியம் பெறும் உறுப்பினர் ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும், சமாசத் தலைவர், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர், வலிகாமம் கொத்தணித் தலைவர் ஆகியோர் சங்கத்தின் ஓய்வூதியம்பெறும் உறுப்பினர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், சங்கத்தின் செயலாளர் மற்றும் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## கூட்டுறவு ஊழியர்களுக்கு.....

1ம் பக்கத் தொடர்ச்சி

பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், பணியாளர்களது நிதிப் பங்களிப்புடனும் அவர்கள் கடமையாற்றும் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பனவற்றின் நிதியுதவியுடனும் மிகச்சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

இந் நலன்புரிச் சங்கத்திற்கு மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தலா 2 இலட்சம் ரூபாவையும், கொத்தணிகள் தலா 3 இலட்சம் ரூபாவையும், சமாசம் 20 இலட்சம் ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளமைக்கு அவற்றின் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

இதுவரை சங்கங்களிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் சுமார் 52 பேருக்கு இம் மாதாந்த ஓய்வூதியத்தை இச்சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்றும் இச்சங்கத்தினுடைய செயற்பாடு மென்மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஒத்துழைக்க வேண்டுமெனவும் இதற்கான ஆலோசனைகளை திணைக்களம் வழங்கும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. இ.பாலச்சந்திரன், தலைமைக் காரியாலய கூ.பரிசோதகர் திரு. இ.விஜயமோகனராசா, சமாசத் தலைவர் திரு.நா.கணேசன், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு. செ.செல்வராசா ஆகியோர் உரையாற்றினர்.



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2012


## பயிற்சி வினாத்தாள்-2

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

### பகுதி-1

❁ மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) 

அருகே தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் சதுரங்களினதும், முக்கோணிகளினதும் சரியான எண்ணிக்கை யாது?

i) 6, 12 ii) 5, 16 iii) 8, 16 iv) 4, 12

02) ஒன்றுக்கள் 8, பத்துக்கள் 3, நூறுகள் 6ற்குச் சமனாகக்கூடிய எண் எது?

i) 638 ii) 863 iii) 368 iv) 386

03) 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் நாட்களின் எண்ணிக்கை யாது?

i) 31 ii) 30 iii) 28 iv) 29

04) பிறப்புச் சான்றிதழ், திருமணப் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கு செல்ல வேண்டிய இடம்?

i) கிராமசேவையாளர் அலுவலகம் ii) பிரதேச செயலகம்

iii) திருமணப் பதிவாளர் காரியாலயம் iv) மருத்துவமனை

05) "ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருமாப் போல்" இப்பாட்டு எவ்வகையான பாட்டு ஆகும்?

i) அருவி வெட்டுப் பாட்டு ii) தாலாட்டுப் பாட்டு iii) பொலிப்பாட்டு iv) கும்மிப்பாட்டு

06) இலத்திரனியல் தொடர்பாடலில் அடங்காதது?

i) துண்டுப் பிரசுரம் ii) தொலைக்காட்சி iii) இணையம் iv) தொலைநகல்

07) "இறைத்த கிணறே ஊறும்" என்பதன் உட்பொருள்?

i) முயற்சி உயர்ச்சியை ஏற்படுத்தும் ii) பொறுமை வெற்றியைத் தரும்

iii) உள்ளதுதான் எப்போதும் உண்டு iv) தீமை செய்பவன் துன்பப்படுவான்

08) ஒரு கிலோ கிராம் சீனியின் விலை ரூ. 96 எனில், 1/4 கிலோ கிராம் சீனியை கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் வேண்டும்?

i) ரூ. 24.00 ii) ரூ. 48.00 iii) ரூ. 72.00 iv) ரூ. 42.00

09) யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் அரண்மனை அமைந்துள்ள இடம் எது?

i) கோப்பாய் ii) கோட்டை iii) நீர்வேலி iv) நல்லூர்

10) ஒரு அமெரிக்க டொலர் ரூ. 100 எனில், ஆயிரம் ரூபா கொடுத்து எத்தனை அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளலாம்?

i) 1,000 ii) 10 iii) 100 iv) 50

### பகுதி-2

❁ பின்வரும் பந்தியை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"பூத்துணிபோல் தோன்றிய நட்சத்திரங்களைவிட பூரண சந்திரனே வானில் தெரிந்தது. தொலைவிலுள்ள சந்திரனின் கதிர்கள் விழுந்து சமுத்திரம் பளபளத்தது. குரைக்கு அண்மையில் இருந்த கற்பாறையைத் தவிர்த்துக் கொண்டு கப்பல் செலுத்தப்பட்டமையால் அது சற்று வளைவான பாதையில் சென்றது.

01) மேற்குறித்த விபரத்தில் நாளின் எந்தக் காலம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது?

02) இங்கு இடம்பெற்றுள்ள உவமானத்தைத் தருக?

03) அண்மையில் என்பதன் எதிர்ச் சொல்லைத் தருக?

04) சமுத்திரம் என்பதற்கு ஒத்த சொல் தருக?

05) கப்பல் எதனைத் தவிர்த்துக்கொண்டு சென்றது?

- **கீழே தரப்படும் சொற்களின் ஆங்கிலப் பதத்தை தருக?**

06) கணினி - .................... 07) தொழில்நுட்பம் - ..........................

- **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தினைத் தருக?**

08) I am sorry - ................... 09) Good afternoon- ......................

- **கீழே தரப்படும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக?**

10) வாடி வென்ன-.................... 11) மமத் ஹொ(ந்)தாய்-........................

- **கீழே தரப்படும் தமிழ்ச் சொற்களின் கருத்தை சிங்களத்தில் தருக?**

12) நன்றி! சுகம் எப்படி?-.................... 13) என்னுடைய பெயர் மது-.........................

- **பின்வரும் பழமொழிகள் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக?**

14) "அடாது செய்தவன் படாது படுவான்"?

15) "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது"

- **கீழுள்ள அடைப்புக்குள் உள்ள உருக்களின் பெறுமதியைக் கணித்து, வினாக்களுக்கு விடை தருக?**

| ○ + △ = $5^2$ | ○ - △ = 5 |
|---|---|

16) ○ இன் பெறுமதி யாது?

17) △ இன் பெறுமதி யாது?

18) $\frac{△}{○}$ இன் பெறுமதி யாது?

19) ○ × △ இன் பெறுமதி யாது?

20) (○ - △) + (○ + △) இன் பெறுமதி யாது?

- **பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தருக?**

21) முக்கனிகளும் எவை?

22) இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடையவரின் பதவி யாது?

23) உலகப் பொதுமொழி எனப்படுவது எது?

24) இ.போ.ச. என்பதன் விரிவைத் தருக?

25) இந்துக்கள் சித்திரை மாதத்தில் கொண்டாடும் விழா என்ன?

- **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

26) சீவக சிந்தாமணி ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகும். ( )

27) ஆட்பதிவுத் திணைக்களமே ஆளடையாள அட்டைகளை வழங்குகின்றது. ( )

28) இயல், இசை, நாடகம் என்பன முக்கலைகள் ஆகும். ( )

29) கழுதையின் மலம் விட்டம் ஆகும். ( )

30) நகர வீதிகளில் மூவர்ண விளக்குகள் அழகுக்காகப் போடப்பட்டிருக்கும். ( )

- **"தைப்பொங்கல்" எனும் தலைப்பில் 6 முழுமையான வாக்கியங்களை (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்) எழுதுக.**

## வினாத்தாள் -1இற்கான விடைகள்

**பகுதி 1**

| | |
|---|---|
| 1) iii | 6) i |
| 2) iii | 7) ii |
| 3) i | 8) ii |
| 4) iii | 9) iii |
| 5) ii | 10) ii |

**பகுதி 2**

1) இரும்புருக்கி ஆலையிலே
2) வாகனம்
3) டங் டங்
4) தொழிற்சாலையிலே
5) குன்று / மலை
6) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
7) பாலும் தேனும்
8) பாதை / வீதி
9) Milk rice
10) Class Teacher
11) இங்கே வாருங்கள்
12) இது என்னுடைய பென்சில்
13) பாடசாலை விடுமுறை
14) தண்ணீர் தாருங்கள்
15) ஆயுபோவன்
16) ஓயாகே நம மொகத்த
17) மது
18) தீபன்
19) கலா
20) வதனா
21) வெண்புறா
22) ஆனந்த சமரக்கோன்
23) 9694
24) யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு
25) விதவை
26) (✓)
27) (✓)
28) (✗)
29) (✓)
30) (✗)

## கல்வி உத்தியோகத்தர்கள் மாதாந்த மாநாடு!

சமாசத்தினால் நடத்தப்படும் கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த மாநாடு கடந்த 9ம் திகதி சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கூ.அ.அலுவலர் திரு இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமைக் காரியாலய கூ.பரிசோதகர் திரு இ.விஜயமோகனராஜா, சமாசப் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி. குணரத்தினம் மற்றும் யாழ்ப்பாணம், அரியாலை, கோண்டாவில், பருத்தித்துறை, அச்சுவேலி, வேலணை, சாவகச்சேரி, கரவெட்டி, சுன்னாகம் ஆகிய சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். அடுத்த கல்வி உத்தியோகத்தர்கள் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ம் திகதி சமாச மண்டபத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பங்குனி குளிர்த்திவிழாவும் வாகன வெள்ளோட்டமும்!

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் முன்பே செயற்படுத்தப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மற்றொரு முன்னேற்றகரமான நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலிகாமம் கொத்தணிக்கு உட்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களால் பருவ காலங்களில் உற்பத்தி செய்யப்படும் பெருந்தொகையான பனங்கள்ளில் ஒரு பகுதியை கொத்தணியின் நவீன போத்தலடைப்பு நிலையத்தில் போத்தலில் அடைப்பதற்கான நடவடிக்கையை கொத்தணி மேற்கொண்டு வருவதோடு, அச்செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்கு வசதியாக ஹன்டர் ரக வாகனமொன்றை புதிதாக கொள்வனவு செய்துள்ளது.

இவ்வாகனத்தின் வெள்ளோட்ட நிகழ்வு கொத்தணியின் போத்தலடைப்பு நிலையத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்தில் இம்மாதம் 19ம் திகதியன்று நடைபெறவுள்ள பங்குனி குளிர்த்தி வைபத்தின்போது இடம்பெறவுள்ளதாக கொத்தணியின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

## மலர்வெளியீட்டு விழா; குழு தெரிவுசெய்யப்பட்டது

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் 40வது ஆண்டை நிறைவடைவதனை முன்னிட்டு மலர் வெளியிடுவது சம்பந்தமாக சமாசத்தில் நடைபெற்ற கூட்டுறவு ஆணையாளரால் கூட்டப்பட்ட தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மாதாந்த மாநாட்டில் ஆராயப்பட்டு மேற்படி விடயம் தொடர்பாக மலர் வெளியீட்டுக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது

இக்குழுவின் முதலாவது கூட்டம் இம்மாம் 21ம் திகதி மு.ப.11.00 மணிக்கு சமாச மண்டபத்தில் சமாசத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளதாக சமாச பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

**நெறியாளர்..** 1ம் பக்கத் தொடர்ச்சி

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் மதுவரி அத்தியட்சகர் திரு என்.சோதிநாதன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரன், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு.இ.விஜயமோகனராசா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு பயிற்சி களை வழங்கினார்கள்.

**அங்கத்தவர், பணியாளர் சமூக பாதுகாப்பு...** 2ம் பக்கத் தொடர்ச்சி

வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் செயற்பாடுகளை மேற்கொள்வார்.

**16.3** இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமக்குள் ஒரு தலைவர், உப தலைவர், செயலாளர் ஆகியோரை தெரிவுசெய்து தமது செயற்பாடுகளை ஆரம்பிப்பர்.

**16.4** இக்குழுவினது பதவிக் காலம் ஒரு வருடமாகும். சமாசத்தின் நிதி வருடமே இக்குழுவினது பதவிக் காலம் ஆகும். அதாவது தை மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை பதவி வகிப்பர்.

**16.5** இக்குழு தெரிவுசெய்யப்பட்டு தை மாதம் 14ம் திகதிக்கு முன் தமது பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான முன்னேற்பாட்டினை இக்குழு உறுப்பினர்களும் சமாசமும் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

**16.6** ஏற்கனவே பதவி வகித்த நிர்வாக சபையினர் தமது காலத்தில் மேற்கொண்ட செயற்பாடுகளை செயற்பாட்டு அறிக்கை ரீதியாகவும், கணக்கறிக்கைகளையும் முறைப்படி புதிய நிர்வாகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும். அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நலத்திட்ட நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மாதாந்தம் கூட்டுறவு அ.உ.ஆணையாளர் அவர்களால் கூட்டப்படும் தலைவர், பொதுமுகாமையாளர் மாதாந்த மாநாட்டில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.


**16.7** புதிய நிர்வாக சபை தெரிவு சமாசக் கூட்ட மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் தலைமையில் நடைபெற சமாசம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்நடைமுறை விதியானது சமூக அபிவிருத்தி நிதிக்குழு பிரதிநிதிகளாலும், சமாசத்தின் தலைவர், இயக்குனர்சபை உறுப்பினர்களாலும், கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டும், கூட்டுறவுச் சட்டம், விதி, துணைவிதிகளுக்கு உட்பட்டும், சங்கங்களின் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் பெறப்பட்டும், அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நலத்திட்ட நிதியம் என்ற பெய்ரைக் கொண்ட நடைமுறைவிதி சமாசக் கூட்ட மண்டபத்தில் 15.02.2011ம் திகதி தயாரிக்கப்பட்டு, சமாச நெறியாளர் சபைக் கூட்டத்தில் 11.06.2011ம் திகதி ஆராயப்பட்டு, 18.06.2011ம் திகதிய பொதுச்சபையின் 08ம் தீர்மானத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நடைமுறை விதியானது 01.09.2011ம் திகதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் பரிசீலிக்கப்பட்டு முறையான நடைமுறை விதியாக அனுமதித்து பதிவு செய்யப்படுகின்றது.

(முற்றும்)

# ம(க)ருத்துவக் கனி



அன்றாடம் நாம் உட்கொள்ளும் நெல்லிக்கனியானது அருமருந்தாகும். இது வாதம், பித்தம், கபம் என்னும் திரிகரண தோஷங்களையும் போக்கவல்லது. இதனாலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதன் பெருமைபற்றிஆயுர் வேத சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. நமது முன்னோர்கள் இதனை இரசாயனம் என்றே அழைத்தார்கள்.

தினசரி உணவில் நெல்லிக்காயைச் சேர்த்துக்கொண்டால் நூறு ஆண்டுகள் வரை இளமையுடன் வாழலாம் என்று சித்தர்கள் தங்களின் குறிப்புக்களில் எழுதி வைத்துள்ளனர். உடல் நலத்திற்கு எற்ற நெல்லிக்காய் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வல்லது.பெண்களோ நெல்லிக்காயினை சௌபாக்கியம் என்று கருதி கார்த்திகை மாதத்தில் உத்தரண துவாதசி அன்று துளசிச் செடியுடன் இணைத்து பூஜிக்கின்றனர். இதிலும் கடுக்காயைப்போலவே பல வகையுண்டு. பெருநெல்லி, கருநெல்லி, அருநெல்லி எனப்படுபவையே அவை. இவற்றில் கருநெல்லி கிடைக்காதது. மற்றையவை கடைகளில் கிடைக்கும்.

### ஐந்து சுவை கொண்டது

ஆறு சுவைகளில் இனிப்பு, புளிப்பு, கைப்பு, துவர்ப்பு, உவர்ப்பு என்னும் ஐந்து சுவைகளும் நெல்லிக்காயில் உள்ளன. இதில் உள்ள இனிப்பும் உவர்ப்பும் பித்தத்தையும், புளிப்பு, கைப்பு என்பன கபததையும் போக்வல்லது.

### உயிர்ச் சத்துக்கள்

உயிர்ச்சத்துக்களான ஏ, பி, சி என்ற மூன்றும் இதில் அடங்கியுள்ளன. சாத்துக்குடிச் சாற்றில் உள்ள விற்றமின் சத்து 20 மடங்கு இதில் உள்ளது. நெல்லிக்காய் வாடிய போதிலும் அதன் தன்மை சிறிதளவும் குறைவதில்லை. நோயற்றவர்களாக மனிதர் வாழ தினசரி 50 மில்லிகிராம் விற்றமின் சி சத்து தேவை. இதற்கு 4 சாத்துக்குடி சாறோ, 8 அவுன்ஸ் தக்காளிச் சாறோ சாப்பிட வேண்டும். ஆனால் இந்த 50 மில்லிகிராம் விற்றமின் சி அரை அவுன்ஸ் நெல்லிக்காயில் கிடைக்கிறது.

### பித்தம் தணிக்கும்

ஜீரணக் கோளாறு, பித்த மயக்கம், காமாலை, கண்நோய், இரத்தச் சோகை போன்றவைகளுக்கு நெல்லிக்காய் மருந்தாகும். இதனை ஊறுகாயாக செய்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். இதனால் பித்தம் தணியும். உணவு எளிதில் ஜீரணமாகும்.

### கர்ப்பிணிகளுக்கு ஏற்றது

நெல்லிக்காய் இரும்புச் சத்து உள்ளது. இரத்தத்தைச் சுத்தம் செய்து இருதயத்தை வலுப்படுத்தும். எனவே கர்ப்பிணிகள் முதல் மாதம் தொட்டு 9 மாதங்கள் வரை காலை, மாலை ஒரு நெல்லிக்காய் அல்லது நெல்லி முள்ளி உட்கொண்டால் அடிக்கடி வரும் வாந்தி நிற்கும். நல்ல பசியும் எடுக்கும். நெல்லிக்காயில் உள்ள இரும்புச்சத்தும், சுண்ணாம்புச் சத்தும் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், இரத்த விருத்தியையும் கர்ப்பிணிகளிடையே ஏற்படுத்துகின்றது. மேலும் கர்ப்பத்தில் உள்ள சிசுவுக்கும் ஆகாரமாகக் கிடைக்கிறது.

### நினைவாற்றல் அதிகரிக்கும்

பிறந்த குழந்தைகளின் உணவில் நெல்லிக்காய்ச் சாற்றினைக் கொடுத்து வந்தால் வளரும் குழந்தைகள் தேக ஆரோக்கியத்துடன் திகழ்வார்கள். மாணவர்கள் இதனை தவறாது (8ம் பக்கம் பார்க்க)

## பெண்ணே விழித்தெழு!



பெண்ணே!
உன் தூக்கத்திலிருந்து விடுதலைபெறு
பெண்ணினம் வாழ வேண்டும்
பெண்ணின் உரிமைகள் வளரவேண்டும்
பெண்ணே நீ விழித்தெழு!

குட்டக் குட்டக் குனிந்து போக
குட்(டை)டி நாய்களா நீங்கள்
எட்டி நின்று குட்டிப் பாருங்கள்
எண்ணிப் பார்க்காது விழுந்திடுவான்
பெண்ணே நீ விழித்தெழு!

தட்டிக்கேள்
தடைகள் உடையும்
எட்டிக்கேள்
எண்ணங்கள் நிறைவேறும்
துடிப்பாய் இரு
துன்பங்கள் துவண்டுபோகும்
விழித்தெழு பெண்ணே
எமக்கும் காலம் வரும்!

பா.மதனபாரதி-அல்வாய்.

## வேலணை சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 19.03.2012 திங்கட் கிழமை மு.ப.11.00 மணிக்கு சங் கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சங்கத் தலைவர் மா.குண ரத்தினம் தலைமையில் நடை பெறவுள்ள இக்கூட்டத்தில் 2009ம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை, 2012ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், மொத்தக் கடன் எல்லை, தனியார் கடன் எல்லை, மற்றும் வாகனத் திருத்த வேலைகளுக்கான முன்னனுமதி, மூலதனச் செலவுகளுக்கான முன்னனுமதி, ஓய்வுபெறும் நெறியாளர் குழு உறுப்பினர்களின் வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினர்களை தெரிவு செய்தல் என்பன இடம்பெற்றது.

## பல்வேறுபட்ட கல்விப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து இம்மாதம் பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புதிதாக கூட்டுறவுச் சங்கங்களில் இணைந்து கொண்ட பணியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி எதிர்வரும் 20ம் திகதி மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வீரசிங்கம் மண்டபத்திலும் 21ம் திகதி வேலணை ப.தெ.வ. அ.கூ.சங்கத்தின் கிளைமுகாமையாளர்களுக்கான பயிற்சி சங்க மண்டபத்திலும், 23ம் திகதி சுன்னாகம் ப.தெவ.அ.கூ.சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி சங்க மண்டபத்திலும், 30ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டிய மகளிர் தின விழா வீரசிங்கம் மண்பத்திலும் நடைபெறவுள்ளது.

## விசேட பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு தி.இந்திரசித்து தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன்,மாவட்ட கூ.அ.அலுவலர் திரு இ.பாலச்சந்திரன், கூ.அ.உத்தியோகத்தர் திரு த.தவமன்னன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

**மருத்துவ...** 7ம் பக்கத் தொடர்ச்சி

உட்கொண்டால் நினைவாற்றல் அதிகரிக்கும், கண்பார்வை தெளிவாகும், புத்திக்கூர்மையை ஏற்படுத்தும், குழந்தைகளுக்கு கோணலாக முளைத்த பற்களுக்கும், காலத்தில் முளைக்காத பற்களுக்கும்கூட நெல்லிக்காய் ஏற்றது. பல்லில் ஏற்படும் பயோரியா என்னும் நோய்க்கும் இது அருமருந்து.நெல்லியிலைச் சாற்றை கொப்பளித்து காயை உட்கொண்டால் உடன் வியாதி நீங்கும்.

எமது கொத்தணியானது உற்பத்தி செயற்பாட்டுடன் பல்வேறு வகையான அபிவிருத்தி மற்றும் நலத்திட்டங்களை மிகச் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இவ்வாண்டும் எமது வேலைத்திட்டங்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு முனைந்து நிற்கின்றது.
அந்த வகையில்................

நலன்புரித் திட்டங்கள்

எமது உற்பத்தி

எமது கொத்தணியின் வரணி வடிசாலையில் சுத்தமாகவும், மிகச் சிறந்த தரத்துடன் உற்பத்தி செய்யப்படுகின்ற 750மி.லீ, 375 மி.லீ, 180 மி.லீ. அளவுகளைக் கொண்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட சாராயம் தற்போது நாடு முழுவதும் விற்பனையில்.

அங்கத்தவர் ஓய்வூதியம்

கொத்தணியின் பங்குச் சங்கங்களான சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்.சங்கத்தினதும், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினதும் 60 வயதைப் பூர்த்தி செய்த, தொழில் செய்ய முடியாது ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்.

இலவச சீருடை வழங்கல்

கொத்தணியால் நிர்வகிக்கப்படுகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இலவச சீருடை வழங்கல்.

பணியாளர் ஓய்வூதிய திட்டம்

பணியாளர்நல சலுகைகள்

வாடகை உழவு இயந்திரம்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)

பருத்தித்துறை வீதி, வரணி — தொலைபேசி 021 321 1653

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.